சாராம்சம்: இனிய குழந்தைகளே, இங்கு உங்களுடைய அனைத்தும் மறைமுகமானது, இதனாலேயே நீங்கள் பகட்டாக இருக்கக் கூடாது. உங்களுடைய புதிய இராச்சியத்தின் போதையைப் பேணுங்கள்.

கேள்வி: உங்களுடைய மேன்மையான தர்மத்துக்கும் தெய்வீகச் செயல்களுக்குமான (தர்மமும், கர்மமும்) ஸ்தாபனைக்காகக் குழந்தைகளாகிய நீங்கள் செய்யும் முயற்சி யாது?

பதில்: இப்பொழுது நீங்கள் ஐந்து விகாரங்களையும் துறப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள், ஏனெனில் இவ்விகாரங்களே அனைவரையும் சீரழித்து விட்டன. இந்நேரத்தில், அனைவரும் சீரழிந்தும், தங்கள் தெய்வீகத் தர்மத்தில் இருந்தும் செயல்களில் இருந்தும் அப்பால் விலகி உள்ளார்கள். தந்தை உங்களுக்கு ஸ்ரீமத்தைக் கொடுத்து, மேன்மையான தர்மத்தையும், தெய்வீகச் செயல்களையும் ஸ்தாபிக்கிறார். ஸ்ரீமத்தைப் பின்பற்றுவதனாலும், தந்தையை நினைவு செய்வதனாலும் நீங்கள் விகாரங்களை வெல்கிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் இக்கல்வி மூலம் உங்களுக்கே இராச்சியத் திலகத்தை இட்டுக் கொள்கிறீர்கள்.

பாடல்: உங்களைக் கண்டு கொண்டதால், நாங்கள் முழு உலகையும் கண்டுகொண்டோம். ஆகாயம், பூமி அனைத்தும் எங்களுக்கே உரியவை.

ஓம்சாந்தி. இனிமையிலும், இனிமையான, ஆன்மீகக் குழந்தைகளாகிய நீங்கள் பாடலைக் கேட்டீர்கள். ஆன்மீகக் குழந்தைகள் மாத்திரம் கூறுகிறார்கள்: பாபா. அவரே எல்லையற்ற தந்தை என்பதையும், உங்களுக்கு எல்லையற்ற சந்தோஷத்தைக் கொடுப்பவர் என்பதையும், அதாவது, அவரே அனைவருடைய தந்தையும் ஆவார் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். ஆத்மாக்களாகிய எல்லையற்ற குழந்தைகள் அனைவரும் தொடர்ந்தும் அவரை நினைவு செய்கிறார்கள். அவர்கள் ஏதோவொரு வழியில் அவரை நினைவு செய்கிறார்கள். எவ்வாறாயினும், பரமாத்மாவாகிய பரமதந்தையிடம் இருந்து அவர்களால் உலக இராச்சியத்தைப் பெற முடியும் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். தந்தை உங்களுக்குக் கொடுக்கின்ற, சத்தியயுக உலகமாகிய இராச்சியம் நிலையானதும், ஆட்ட அசைக்க முடியாததும் ஆகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எங்களுடைய அந்த இராச்சியம் 21 பிறவிகளுக்கு நீடிக்கிறது. அங்கு முழு உலகிலும் எங்கள் இராச்சியமே இருப்பதுடன், அதை எவராலும் எங்களிடம் இருந்து அபகரிக்கவும் முடியாது. எவராலும் அதைக் கொள்ளையிட முடியாது. எங்கள் இராச்சியம் அசைக்க முடியாதது, ஏனெனில் அங்கு ஒரு தர்மம் மாத்திரமே இருக்கிறது. அங்கு வேற்றுமை இருப்பதில்லை. அது பிரிவினையற்ற இராச்சியம் ஆகும். குழந்தைகளாகிய நீங்கள் இப்பாடலைக் கேட்கும்பொழுது, உங்கள் இராச்சியத்தைப் பற்றி நீங்கள் போதை அடைய வேண்டும். உங்கள் வீட்டில் அத்தகைய பாடல்கள் இருக்க வேண்டும். உங்களுடைய அனைத்தும் மறைமுகமானவை, ஆனால் முக்கியஸ்தர்களோ பெருமளவுக்கு வெளிப்பகட்டைக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எந்த பகட்டையும் கொண்டிருப்பதில்லை. பாபா யாரில் பிரவேசித்துள்ளாரோ,

அவரும் மிகவும் சாதாரணமானவர் என்பதை உங்களால் பார்க்க முடியும். இங்கு மனிதர்கள் அனைவரும் அதர்மமான, தீய செயல்களைச் செய்கிறார்கள். இதனாலேயே அவர்கள் விவேகம் அற்றவர்கள் எனப்படுகிறார்கள் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். அவர்களது புத்தி முழுமையாகவே பூட்டப்பட்டுள்ளது. நீங்கள் மிகவும் விவேகிகளாக இருந்தீர்கள்! நீங்கள் உலக அதிபதிகளாக இருந்தீர்கள். இப்பொழுது அவர்களால் எப்பயனும் இல்லை என்னும் அளவுக்கு மாயை அனைவரையும் மிகவும் விவேகம் அற்றவர்களாக ஆக்கிவிட்டாள். கடவுளைக் கண்டுகொள்வதற்கு, மக்கள் பெருமளவு தவம் செய்து, வேள்வி போன்றவற்றையும் வளர்க்கிறார்கள், ஆனால் அவர்கள் எதையும் அடைவதில்லை. அவர்கள் அவ்விதமாகத் தொடர்ந்தும் தடுமாறி அலைகிறார்கள். நாளுக்கு நாள், அவர்கள் தொடர்ந்தும் துர்ப்பாக்கியசாலிகள் ஆகுகிறார்கள். மனிதர்கள் எந்தளவுக்குத் தமோபிரதான் ஆகுகின்றார்களோ, அந்தளவுக்கு, அங்கு பாக்கியமின்மை ஏற்படுகிறது. நினைவுகூரப்படுகின்ற ரிஷிகளும் முனிவர்களும் தூய்மையாக இருந்தார்கள். அவர்கள் 'நேற்றி, நேற்றி' (இதுவுமல்ல, அதுவுமல்ல) என அவர்கள் கூறுவார்கள். இப்பொழுது அவர்கள் தமோபிரதான் ஆகிவிட்டதால், 'நானே சிவன், உங்களுக்கும் அது பொருந்தும்" (சிவோஹம்! தத்வம்!) எனக் கூறுகிறார்கள். அல்லது, அவர் சர்வவியாபியும், அனைவரிலும் இருக்கிறார் எனவும் கூறுகிறார்கள். அம்மக்கள் பரமாத்மா எனக் கூறுகிறார்கள். அவர்கள் ஒருபொழுதும் பரமதந்தை எனக் கூறுவதில்லை. பரமதந்தையைச் சர்வவியாபி என அழைப்பது தவறானது. இதனாலேயே அவர்கள் ஈஸ்வர் அல்லது பரமாத்மா எனக் கூறுகிறார்கள். 'தந்தை" என்னும் வார்த்தை ஒருபொழுதும் அவர்கள் புத்தியில் பிரவேசிப்பதில்லை. சிலர் அதைக் கூறினாலும், அது பெயரளவில் மாத்திரமே உள்ளது. அவர்கள் அவரைப் பரமாத்மா என உண்மையிலேயே நம்பியிருந்தால், அவர்களின் புத்தி பிரகாசிக்கும். தந்தை உங்களுக்குச் சுவர்க்க ஆஸ்தியைக் கொடுக்கிறார். அவர் தந்தையாகிய, சுவர்க்கக் கடவுள் ஆவார். ஆகவே, நாங்கள் ஏன் இன்னமும் நரகத்தில் இருக்கிறோம்? இப்பொழுது நாங்கள் எவ்வாறு முக்தியையும், ஜீவன்முக்தியையும் அடைய முடியும்? இது எவருடைய புத்தியிலும் பிரவேசிப்பதில்லை. ஆத்மாக்கள் தூய்மை அற்றவர்கள் ஆகிவிட்டார்கள். முதலில், ஆத்மாக்கள் சதோபிரதானாகவும், விவேகிகளாகவும் இருக்கிறார்கள். பின்னர் ஆத்மாக்கள் சதோ, ரஜோ, தமோ ஸ்திதிகளினூடாகச் சென்று, விவேகம் அற்றவர்கள் ஆகுகிறார்கள். நீங்கள் இப்பொழுது விவேகமானவர் ஆகியுள்ளீர்கள். பாரதம் புதிய உலகமாக இருக்கும் பொழுது, அது உங்கள் இராச்சியமாக இருந்தது என்பதை பாபா இப்பொழுது நினைவூட்டுகிறார். ஒரே வழிகாட்டலும், ஒரே தர்மமும், ஒரே பாஷையும் இருந்தன. அத்துடன் ஒரு சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் உடைய ஓர் இராச்சியமாக இருந்தது. பின்னர், துவாபர யுகத்தில், பாவப்பாதை ஆரம்பிக்கிறது. பின்னர் அனைத்தும் ஒவ்வொருவரினதும் கர்மாவில் தங்கியுள்ளது. நீங்கள் உங்கள் கர்மாவிற்கு ஏற்ப, ஒரு சரீரத்தை நீக்கிவிட்டு, இன்னுமொன்றை எடுக்கிறீர்கள். தந்தை கூறுகிறார்: நீங்கள் 21 பிறவிகளுக்கு இராச்சியத்தை அடையுமாறு அத்தகைய செயல்களை நான் இப்பொழுது உங்களுக்குக் கற்பிக்கிறேன். அங்கு உங்களுக்கு எல்லைக்கு உட்பட்ட தந்தையர் இருந்தாலும், எல்லையற்ற தந்தையிடம் இருந்து இராச்சியமாகிய ஆஸ்தியை நீங்கள் பெற்றீர்கள் என்ற ஞானம் அங்கு உங்களுக்கு இருப்பதில்லை. பின்னர், துவாபர யுகத்தில், இராவண இராச்சியம் ஆரம்பித்து, உறவுகள் விகாரங்கள்

உடையவை ஆகுகின்றன. நீங்கள் பெறுகின்ற பிறவி உங்கள் கர்மாவிற்கு ஏற்பவே இருக்கிறது. பாரதத்தில், பூஜிக்கத் தகுதிவாய்ந்த அரசர்களும், பூஜிக்கின்ற அரசர்களும் இருக்கிறார்கள். சத்திய, திரேதா யுகங்களில் அனைவரும் பூஜிக்கத் தகுதிவாய்ந்தவர்கள் ஆவார்கள். அங்கு வழிபாடோ அல்லது பக்தியோ கிடையாது. துவாபர யுகத்தில் பக்தி மார்க்கம் ஆரம்பிக்கும் பொழுது, அரசர், அரசி, பிரஜைகள் அனைவரும் வழிபடுபவர்களாகவும் பக்தர்களாகவும் ஆகுகிறார்கள். சூரிய வம்சத்துக்குரிய மேலான மகத்துவம் வாய்ந்த பூஜிக்கத்தகுதியான அரசர்களும், பின்னர் பூஜிப்பவர் ஆகுகிறார்கள். இப்பொழுது நீங்கள் விகாரம் அற்றவர்கள் ஆகுவதற்கான வெகுமதி 21 பிறவிகளுக்கு நீடிக்கிறது. அதன் பின்னர் பக்தி மார்க்கம் ஆரம்பம் ஆகின்றது. அவர்கள் தேவர்களுக்கு ஆலயங்களைக் கட்டி, அவர்களை வழிபடுகிறார்கள். இது பாரதத்தில் மாத்திரமே இடம்பெறுகிறது. தந்தை கூறுகின்ற 84 பிறவிகளின் கதையும் பாரத மக்களுக்கு மாத்திரமே ஆகும். ஏனைய சமயத்தவர்கள் பின்னரே வருகிறார்கள். பின்னர், சனத்தொகை வளர்வதால், அவர்களில் பலர் இருக்கிறார்கள். பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களின் முகச்சாயல்களும் ஒவ்வொரு விடயத்திலும் வேறுபட்டவை. அவர்களுடைய சாஸ்திர சம்பிரதாயங்களும் வேறுபட்டவை. ஒரு விதை சின்னஞ் சிறியதும், அதிலிருந்து வெளிப்படுகின்ற விருட்சம் பெரிதாகவும் உள்ளதைப் போன்று, சம்பிரதாயங்கள் அனைத்தும் பக்தி மார்க்கத்துக்கு தேவைப்படுகின்றன. ஒரு விருட்சத்தின் இலைகள் போன்றவற்றைக் கணக்கிட முடியாததைப் போன்று, அவ்வாறாகவே பக்தியில் அதிகளவு விரிவாக்கம் உள்ளது. அவர்கள் தொடர்ந்தும் பல்வேறு சமயநூல்களை உருவாக்குகிறார்கள். இப்பொழுது தந்தை குழந்தைகளாகிய உங்களுக்குக் கூறுகிறார்: பக்தி மார்க்கத்துக்குரிய அனைத்தும் முடிவடைய வேண்டும். இப்பொழுது தந்தையாகிய, என்னை நினைவு செய்யுங்கள். பக்தியின் செல்வாக்கு அதிகளவில் உள்ளது. அது மிகவும் அழகானது, அதிகளவுக்கு நடனம் ஆடுதல், பகட்டு, பாடுதல், செலவு போன்றன உள்ளன. தந்தை கூறுகிறார்: இப்பொழுது என்னையும் உங்கள் ஆஸ்தியையும் நினைவுசெய்யுங்கள். உங்களுடைய ஆதி, சனாதன தேவிதேவதா தர்மத்தை நினைவு செய்யுங்கள். நீங்கள் பிறவிபிறவியாகப் பல்வேறு விதமான பக்தியைச் செய்து வருகிறீர்கள். சந்நியாசிகள் ஆத்மாக்களின் வசிப்பிடமாகிய ஒளித் தத்துவத்தைக் கடவுளாகக் கருதுகிறார்கள். அவர்கள் பிரம்ம தத்துவத்தை நினைவு செய்கிறார்கள். உண்மையில், சந்நியாசிகள் சதோபிரதானாக இருக்கும் பொழுது, அவர்கள் காடுகளுக்குச் சென்று, அமைதியாக வசிக்கிறார்கள். அவர்கள் பிரம்ம தத்துவத்தினுள் இரண்டறக் கலக்கப் போகின்றார்கள் என்பதல்ல. பிரம்ம தத்துவத்தின் நினைவில் தங்கள் சரீரங்களை விட்டு நீங்குவதனால், தாங்கள் அத்தத்துவத்தினுள் இரண்டறக் கலப்பார்கள் என அவர்கள் நம்புகிறார்கள். தந்தை கூறுகிறார்: எவரும் பிரம்ம தத்துவத்தினுள் இரண்டறக் கலக்க முடியாது. ஆத்மாக்கள் அழிவற்றவர்கள், எவ்வாறு ஓர் ஆத்மாவால் எதனுள்ளும் இரண்டறக் கலக்க முடியும்? பக்தி மார்க்கத்தில் அவர்கள் பெரும்பாடு படுகிறார்கள். ஆனால் பின்னர் கடவுள் நிச்சயமாக ஏதோவொரு ரூபத்தில் வருவார் என்றும் சிலர் கூறுகிறார்கள். இப்பொழுது, யார் கூறுவது சரி? தாங்கள் பிரம்ம தத்துவத்துடன் யோகம் செய்து, அதனுள் இரண்டறக் கலப்போம் என அவர்கள் கூறுகிறார்கள். கடவுள் நிச்சயமாக ஏதோவொரு ரூபத்தில் தூய்மை அற்றவர்களைத் தூய்மையாக்குவதற்கு வருவார் என இல்லற தர்மத்தில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். எவ்வாறாயினும்,

அவர் மேலேயிருந்து தூண்டுதல் மூலம் கற்பிப்பார் என்பதல்ல. ஓர் ஆசிரியர் வீட்டில் அமர்ந்திருந்து அனைவரையும் தூண்டுவாரா? ‘தூண்டுதல்’ போன்ற அத்தகைய விடயங்கள் எதுவும் கிடையாது. தூண்டுதல் மூலம் எதுவும் நடைபெறாது. சங்கரரின் தூண்டுதல் மூலம் விநாசம் இடம்பெறுகிறது எனக் கூறப்பட்டிருந்தாலும், உண்மையில் அது நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஏவுகணைகள் போன்றவற்றை அவர்கள் உற்பத்தி செய்ய வேண்டும். பெயரளவிலேயே அதன் புகழ் உள்ளது. தங்கள் மூதாதைகளின் புகழை அவர்களில் எவரும் அறியார். அவர்கள் சமய ஸ்தாபகர்களையும் தங்கள் குருமார்கள் என அழைக்கிறார்கள். எவ்வாறாயினும், அவர்கள் தங்கள் சமயங்களையே ஸ்தாபிக்கிறார்கள். சற்கதியை அருள்பவரே குரு ஆவார். சமய ஸ்தாபகர்கள் தங்கள் சமயங்களை ஸ்தாபிப்பதற்கே வருகிறார்கள், பின்னர் அவர்களின் வம்சங்கள் (சீடர்கள்) அவர்களின் பின்னால் வருகின்றனர். அவர்கள் எவருக்கும் சற்கதியை அருள்வதில்லை. ஆகவே, அவர்கள் ஏன் குருமார்கள் என அழைக்கப்பட வேண்டும்? அனைவருக்கும் சற்கதியை அருள்பவர் என அழைக்கப்படுகின்ற ஒரேயொரு குருவே உள்ளார். தந்தையாகிய, கடவுள் மாத்திரமே, வந்து அனைவருக்கும் சற்கதியை அருள்கிறார். அவர் முக்தியையும் ஜீவன்முக்தியையும் அருள்கிறார். அவரை நினைவு செய்வதை எவராலும் நிறுத்த முடியாது. ஒரு மனைவி தனது கணவனை எவ்வளவு நேசித்தாலும், இருப்பினும் அவள் 'ஓ கடவுளே! ஓ ஈஸ்வரா!" என்றே அழைக்கிறாள். ஏனெனில் அவர் மாத்திரமே அனைவருக்கும் சற்கதியை அருள்பவர். அவை அனைத்துமே படைப்புக்கள் என்றும், அவரே தந்தையாகிய படைப்பவர் என்றும் தந்தை இங்கே அமர்ந்திருந்து விளங்கப்படுத்துகிறார். ஒரு தந்தை மாத்திரமே அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கிறார். ஒரு சகோதரரால் ஒரு சகோதரருக்கு ஓர் ஆஸ்தியைக் கொடுக்க முடியாது. ஓர் ஆஸ்தி எப்பொழுதும் ஒரு தந்தையிடம் இருந்தே பெறப்படுகிறது. நான் எல்லையற்ற குழந்தைகளாகிய உங்கள் அனைவருக்கும் உங்களுடைய எல்லையற்ற ஆஸ்தியைக் கொடுக்கிறேன். ஆகையாலேயே, 'ஓ பரமதந்தையே, என்னை மன்னியுங்கள்! என் மீது கருணை கொள்ளுங்கள்!" என அனைவரும் என்னை நினைவு செய்கிறார்கள். அவர்கள் எதையும் புரிந்து கொள்வதில்லை. பக்தி மார்க்கத்தில், அவர்கள் அவரைப் பல்வேறு வழிகளில் புகழ்கிறார்கள்! நாடகத்துக்கேற்ப அவரும் அவருடைய பாகத்தை நடிக்கிறார். தந்தை கூறுகிறார்: அவர்கள் என்னை அழைக்கும் பொழுது, நான் வருவதில்லை. இந்நாடகம் ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது. நாடகத்தில் நான் வருகின்ற பாகம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. நான் ஒரேயொரு தர்மத்தின் ஸ்தாபனையையும், எண்ணற்ற சமயங்களின் விநாசத்தையும், அதாவது, சத்திய யுகத்தின் ஸ்தாபனையையும், கலியுகத்தின் விநாசத்தையும் தூண்டுகிறேன். நான் எனக்குரிய நேரத்தில் நானாகவே வருகிறேன். பக்தி மார்க்கத்தின் பாகமும் நாடகத்தில் உள்ளது. இப்பொழுது பக்தி மார்க்கத்தின் பாகம் முடிவுக்கு வந்துள்ளதனால், நான் இப்பொழுது வந்திருக்கிறேன். குழந்தைகள் கூறுகிறார்கள்: நான் 5000 வருடங்களின் பின்னர் மீண்டும் ஒருமுறை உங்களைச் சந்தித்திக்கிறேன், பாபா, நீங்கள் முன்னைய கல்பத்திலும் பிரம்மாவின் சரீரத்தில் பிரவேசித்தீர்கள். இந்நேரத்தில் மாத்திரமே நீங்கள் இந்த ஞானத்தைப் பெறுகிறீர்கள். நீங்கள் அதை மீண்டும் பெறுவதில்லை. இது ஞானமும், அது பக்தியும் ஆகும். மேலேறும் ஸ்திதியே இந்த ஞானத்தின் வெகுமதி ஆகும். உங்களால் ஒரு விநாடியில் முக்தியையும்,

ஜீவன்முக்தியையும் அடைய முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. ஜனகர் ஒரு விநாடியில் ஜீவன்முக்தியைப் பெற்றார். ஒரு ஜனகர் மாத்திரமா ஜீவன்முக்தி அடைந்தார்? ஜீவன்முக்தி என்றால் இராவண இராச்சியத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட வாழ்வு என்று அர்த்தம். இப்பொழுது குழந்தைகள் அனைவரும் சீரழிந்து விட்டார்கள் என்பதைத் தந்தை அறிவார். அவர்கள் இப்பொழுது சற்கதியைப் பெறவுள்ளார்கள். சீரழிவில் இருந்து, அவர்கள் முக்தி, ஜீவன்முக்தி என்னும் ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுகிறார்கள். முதலில் நீங்கள் முக்திக்கும், பின்னர் ஜீவன்முக்திக்கும் செல்வீர்கள். அமைதி தாமத்தில் இருந்து, நீங்கள் சந்தோஷ தாமத்துக்குச் செல்வீர்கள். தந்தை முழுச் சக்கரத்தின் இரகசியங்களையும் விளங்கப்படுத்தி உள்ளார். ஏனைய சமயங்களும் உங்களின் பின்னால் வருவதுடன், மனித உலக சனத்தொகையும் தொடர்ந்தும் வளர்கிறது. தந்தை கூறுகிறார்: இந்நேரத்தில், மனித உலக விருட்சம் தமோபிரதான் ஆகியுள்ளதுடன், முற்றாக உக்கிய நிலையையும் அடைந்துவிட்டது. ஆதி சனாதன தேவிதேவதா தர்ம விருட்சத்தின் முழு அடிமரமும் உக்கி விட்டது. ஏனைய சமயங்கள் அனைத்தும் இன்னமும் உள்ளன. பாரதத்தில் ஒரு நபரேனும் தங்களை ஆதிசனாதன தேவிதேவதா தர்மத்துக்கு உரியவராகக் கருதுவதில்லை. அவர்கள் தேவ தர்மத்துக்கு உரியவர்கள். ஆனால் தேவர்கள் தூய்மையானவர்கள் என்னும் காரணத்தினால் தாங்கள் தேவ தர்மத்துக்கு உரியவர்களாக இருந்தார்கள் என்பதை இந்நேரத்தில் அவர்கள் நம்புவதில்லை. தாங்கள் தூய்மை அற்றவர்கள் என அவர்கள் நினைக்கிறார்கள். தூய்மையற்ற நாங்கள் எவ்வாறு எங்களைத் தேவர்கள் என அழைக்க முடியும்? தங்களை இந்துக்கள் என அழைக்கும் வழக்கம் நாடகத் திட்டத்துக்கேற்பவே உருவாக்கப்பட்ட ஒரு வழக்கம் ஆகும். குடிசன மதிப்பீட்டிலும் எங்களை இந்து சமயத்துக்கு உரியவர்கள் என்றே அவர்கள் எழுதுகிறார்கள். அவர்கள் குஜராத்திகளாக இருந்தாலும், அவர்கள் இந்து குஜராத்திகள் என்றே பதியப்படுகிறார்கள். எங்கிருந்து இந்து சமயம் வந்தது எனக் குறைந்த பட்சம் அவர்களைக் கேளுங்கள்! எவருக்கும் தெரியாது. தங்கள் சமயம் ஸ்ரீகிருஷ்ணரால் ஸ்தாபிக்கப்பட்டது என அவர்கள் இலகுவாகக் கூறுகிறார்கள். எப்பொழுது? துவாபர யுகத்தில் ஆகும். துவாபர யுகத்திலேயே அவர்கள் தங்கள் தர்மத்தை மறந்து, தங்களை இந்துக்கள் என அழைக்க ஆரம்பித்தார்கள். அவர்களுடைய தெய்வீக தேவ தர்மமும், செயல்களும் சீரழிந்து விட்டன என இதனாலேயே கூறப்பட்டுள்ளது. அங்கு, அனைவரும் நல்ல செயல்களையே செய்கிறார்கள். இங்கு, அனைவரும் தீய செயல்களையே செய்கிறார்கள், இதனாலேயே கூறப்பட்டுள்ளது: தெய்வீக தேவ தர்மமும், செயல்களும் சீரழிந்து விட்டன. மேன்மையான தர்மமும், மேன்மையான தெய்வீகச் செயல்களும் இப்பொழுது மீண்டும் ஒருமுறை ஸ்தாபிக்கப்படுகிறது. இதனாலேயே தொடர்ந்தும் இவ்விகாரங்களைத் துறக்குமாறு உங்களுக்குக் கூறப்பட்டுள்ளது. இவ்விகாரங்கள் அரைக் கல்பத்துக்கு இருந்தன. இப்பொழுது ஒரு பிறவியில் நீங்கள் அவற்றைத் துறக்க வேண்டும். அதற்கு முயற்சி தேவை. உங்களால் சில முயற்சிகளைச் செய்யாமல் முழு உலக இராச்சியத்தையும் பெற முடியாது! நீங்கள் தந்தையை நினைவு செய்யும் பொழுது மாத்திரமே, நீங்கள் உங்களுக்கே இராச்சியத் திலகத்தை இட்டுக் கொள்வீர்கள். அதாவது, அப்பொழுதே, நீங்கள் ஓர் இராச்சியத்துக்குத் தகுதியானவர்கள் ஆகுவீர்கள். நீங்கள் அதிகம் நினைவில் நிலைத்திருந்து, ஸ்ரீமத்தைப் பின்பற்றும் பொழுது, நீங்கள் அரசர்க்கு எல்லாம் அரசர்கள் ஆகுவீர்கள். உங்களுக்குக் கற்பிப்பதற்கு

ஆசிரியர் வந்துள்ளார். இதுவே ஒரு சாதாரண மனிதனிலிருந்து ஒரு தேவராக மாறுவதற்கான பாடசாலை ஆகும். ஒரு சாதாரண மனிதனில் இருந்து நாராயணனாக மாறுவதற்கான கதையை அவர் உங்களுக்குக் கூறுகிறார். இக்கதை மிகவும் பிரபல்யமானது. அது அமரத்துவக் கதை எனவும், சத்திய நாராயணனின் கதை எனவும், மூன்றாவது கண்ணின் கதை எனவும் அழைக்கப்படுகிறது. மூன்றினதும் அர்த்தத்தைத் தந்தை உங்களுக்கு விளங்கப்படுத்துகிறார். பக்தி மார்க்கத்தில் பல கதைகள் உள்ளன. இப்பாடல் எவ்வளவு சிறந்தது எனப் பாருங்கள்! எவராலும் எங்களிடம் இருந்து ஓர் அதிபதிகள் என்ற அந்தஸ்தை அபகரிக்க முடியாதவாறு, பாபா எங்களை முழு உலகத்துக்கும் அதிபதிகளாக ஆக்குகிறார். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டெடுக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. நீங்கள் ஒரே வழிகாட்டலையும், ஒரே இராச்சியத்தையும், ஒரே தர்மத்தையும் ஸ்தாபிப்பதற்கான கருவிகள் என்னும் விழிப்புணர்வில் எப்பொழுதும் இருங்கள். ஆகவே, நீங்கள் ஒன்றுபட்டு, ஒரு வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும்.
2. உங்களுக்கே ஓர் இராச்சியத் திலகத்தைக் கொடுப்பதற்கு, விகாரங்களைத் துறப்பதற்கான முயற்சியைச் செய்யுங்கள். கல்வியில் முழுக் கவனம் செலுத்துங்கள்.

ஆசீர்வாதம்: எங்கும் இடம்பெறும் சகல சேவைகளையும் கையாளும் வேளையில், உங்கள் கர்மாதீத் ஸ்திதியில் ஸ்திரமாக இருப்பதன் மூலம் வெற்றி சொரூபம் ஆகுவீர்களாக.

நீங்கள் முன்னேறிச் செல்லும் போது, எங்கும் இடம்பெறுகின்ற சேவைகள் அனைத்தின் விரிவாக்கத்தையும் கையாளுவதற்கு நீங்கள் பல்வேறு வசதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் கடிதங்கள், தந்திகள், தொலைபேசி போன்றன அந்த நேரத்தில் வேலை செய்ய மாட்டாது. அவ்வாறான நேரத்தில், உங்களுக்கு கம்பியற்ற (வயர்லஸ்) இணைப்பு தேவையாக இருக்கும். அதற்கு, ஒரு நிமிடம் ஒரு கர்மயோகியாகவும் அடுத்த கணம், உங்கள் கர்மாதீத் ஸ்திதியில் ஸ்திரமாகவும் இருங்கள். அதன் பின்னர், உங்கள் எண்ணங்களின் வெற்றியினால் எங்கும் நீங்கள் ஒத்துழைப்பவராக இருக்க முடியும்.

சுலோகம்: உங்களுடைய இலகுயோகி வாழ்க்கையினால், இறைவனின் அன்பான பராமரிப்பு வெளிக்காட்டப்படுகின்றது.

---ஓம் சாந்தி---

அவ்யக்த சமிக்ஞை: ஒற்றுமை மற்றும் நம்பிக்கை என்ற சிறப்பியல்புடன், வெற்றி நிறைந்தவர் ஆகுங்கள்.

ஒவ்வொருவரும் குறிப்பாக இரு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்: 1. உங்கள் சம்ஸ்காரங்களை இசைவாக்கிக் கொள்வதில் சதா ஒற்றுமையாக

இருப்பது. 2. ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்து, சதா திருப்தியாக இருந்து, பிறரையும் திருப்திப்படுத்துவது. இந்த இரு விடயங்களிலும் நீங்கள் சதா கவனம் செலுத்;தும் போது, தந்தை எவ்வாறானவரோ அவ்வாறாகவே தென்படுவதால், வெளிப்பாடு இடம்பெறும்.